**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.4/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.4** |
| Name | **:** | **கார்த்தி** |
| Father's/Husband Name: | : | கோவிந்தசாமி |
| Address : | : | வல்லாபுரம், வேப்பந்தட்டை வட்டம்,பெரம்பலூர். |
| Age | : | 40/2023 |

<u>தேதி: 27/02/2023</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>( **2 ம் எதிரி ஆஜர் 1 ம் எதிரி ஆஜர் இல்லை./கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மீண்டும் 1 ம் எதிரி விசாரணையின் போது ஆஜர் ஆனார்.)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது அரும்பாவூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அதில் ஒருவரின் பெயர் கோகுல் மற்றொருவரின் பெயர் சங்கிலி. கடந்த 15.11.2020 அன்று இரவு 19.30 மணியளவில் பெரம்பலூர்-ஆத்தூர் ரோட்டில் மதர்ஷா ரோடு பிரிவு அருகே நானும் காவல் உதவி ஆய்வாளர் செந்தமிழ்செல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர் அண்ணாதுரை, தலைமை காவலர் மான்சிங் ஆகியோர் வாகன தணிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது முத்துசாமி என்பவர் கருப்பு நிற பல்சர் இருசக்கர வாகனத்தில் மது

போதையில் வந்தார். அந்த வாகனம் TN 46 Y 1109 என்ற பதிவெண் கொண்டு பல்சர் வாகனம். அவரை செந்தமிழ்செல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர் அண்ணாதுரை மற்றும் மான்சிங் ஆகியோர் வழி மறித்து விசாரித்துள்ளனர். அவர் மது போதையில் இருப்பது அவர்களுக்கு தெரிய வந்துள்ளது. என்னை எவ்வாறு மறித்து வழக்கு பதிவு செய்தீர்கள் என அவர் யாருக்கோ போனில் தகவல் கொடுத்தார். அப்போது சங்கிலி, கோகுல், பாலாஜி ஆகியோர் அங்கு வந்தனர். வந்தவர்கள் எங்களது வாகனத்தின் மீது எவ்வாறு கேஸ் போட முடியும் என கெட்ட வார்த்தையால் திட்டி, அரசு பணி செய்ய விடாமல் பேசி கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்தார்கள். அதனால் அந்த வாகனத்தை நாங்கள் கைப்பற்றி காவல் நிலையத்திற்கும் எடுத்து சென்றோம். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் அன்றைய தினம் பணிக்கு காவல் சீருடையில் தான் சென்றேன். எஸ்ஐ மறித்த போது அவரின் பெயர் மற்றும் விவரம் தெரியாது பின்பு தெரிந்து கொண்டோம். மது போதையில் ஒருவர் வந்தால் அவரை மருத்துவமனை அழைத்து சென்று பரிசோதிப்போமா என்றால் எங்களிடம் உள்ள டிடி மிஷினை வைத்து சோதனையிடுவோம். அதை சோதனையிட்டோமா என்றால் எஸ்ஐ தான் செய்தார். நான் சோதனையிட்டதை பார்த்தேன். பொதுவாக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றால் மருத்துவமனையில் பரிசோதனைக்கு உட்படுத்தி சான்று பெற

வேண்டும் என்றால் சரிதான். அவரை மருத்துவமனைக்கு சென்று நாங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை. சம்பவம் நடந்த பிறகு முத்துசாமியையும் அவரது வாகனத்தையும் உடனே காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம். அப்போது நானும் காவல் நிலையம் சென்றேன். நான்கு பேருமே சென்று விட்டோமா என்றால் சென்றோம். சம்பவம் நடந்த நேரத்திலிருந்து சுமார் 10 நிமிடத்தில் அதாவது 19.40 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். அப்போது காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்தார். புகாரில் முத்துசாமியின் பெயர் இல்லை என்றால் சரியல்ல. என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்த போது நான் முத்துசாமியின் பெயரையும் கூறினேனா என்றால் கூறினேன். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும், எங்களது உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அன்றைய தினம் பணிக்கு சென்ற போது எங்கு பணிக்கு செல்கிறோம் என எங்கள் காவல் நிலையத்தில் எழுதி வைத்து விட்டு செல்வோம் என்றால் சரிதான். நாங்கள் அன்றைய தினம் அந்த பணிக்கு சென்றோம் என காண்பிக்கும் ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.4/2022 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | **மான்சிங்** |
| Father's/Husband Name: | : | முத்தையா |
| Address : | : | காவல் குடியிருப்பு, துறைமங்கலம், பெரம்பலூர். |
| Age | : | 51/2023 |

தேதி: 27/02/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.( **2 ம் எதிரி ஆஜர் 1 ம் எதிரி ஆஜர் இல்லை./கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மீண்டும் 1 ம் எதிரி விசாரணையின் போது ஆஜர் ஆனார்.)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது பெரம்பலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.11.2020 அன்று இரவு 19.30 மணியளவில் பெரம்பலூர்-ஆத்தூர் ரோட்டில் மதர்ஷா ரோடு பிரிவு அருகே நானும் காவல் உதவி ஆய்வாளர்கள் செந்தமிழ்செல்வி மற்றும் அண்ணாதுரை, முதல் நிலை காவலர் கார்த்திக் ஆகியோர் வாகன தணிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது முத்துசாமி என்பவர் இருசக்கர வாகனத்தில் மது போதையில் வந்தார். அந்த வாகனம் TN 46 Y 1109 என்ற பதிவெண் கொண்டு பல்சர் வாகனம் அவரை நாங்கள் மறித்து சோதனையிட்ட போது மது போதையில் இருந்தது தெரிய வந்தது. வழக்கு பதிவு நாங்கள் செய்த போது அவர் கெட்ட

வார்த்தையால் திட்டினார். பின்பு போன் செய்தார் அப்போது சங்கிலி, கோகுல், பாலாஜி ஆகியோர் அங்கு வந்தனர். வந்தவர்கள் எங்களது வாகனத்தின் மீது எவ்வாறு கேஸ் போட முடியும் என கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். மேலும் எங்கள் பணி செய்ய விடாமல் பேசினார்கள். மேலும், எங்கள் மீது கேஸ் போட்டால் கொலை செய்து விடுவேன் என மிரட்டினார்கள். ஆஜர் எதிரிகளில் கோகுல் மற்றும் சங்கிலி(சாட்சியால் குறிப்பிட்டு அடையாளம் காண முடியவில்லை). அவர்கள் வாகனத்தை எடுத்து தப்பிக்க முயன்ற போது காவல் உதவி ஆய்வாளர் செந்தமிழ்செல்வி வாகனத்தை மறித்து காவல் நிலையம் கொண்டு சென்றார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது கூறிய சங்கதிகளை தான் காவல் ஆய்வாளர் விசாரணையின் போதும் கூறினேன் என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டி வந்தவர் பெயர் முத்துசாமி என்றால் சரிதான். முத்துசாமி மீது மது போதையில் வாகனம் ஓட்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த விவரம் எனக்கு தெரியும். நாங்கள் அன்றைய தினம் பணிக்கு சென்ற போது எங்கு பணிக்கு செல்கிறோம் என எங்கள் காவல் நிலையத்தில் எழுதி வைத்து விட்டு செல்வோம் என்றால் சரிதான். நாங்கள் அன்றைய தினம் அந்த பணிக்கு சென்றோம் என காண்பிக்கும் ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர்கள் இல்லாமல் காவலர்கள் 2 பேர்கள் இருந்தோம். ஆக மொத்தம் 4 பேர்கள்

இருந்தோம். வாகனத்தை கைப்பற்றிய உடன் உதவி ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றார். தகவல் கொடுத்ததாக கூறப்படும் போனை நாங்கள் கைப்பற்றவில்லை. நான் அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். எல்லோரும் ஒன்றாக தான் காவல் நிலையம் சென்றோம். அப்போது காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்தார். மறுநாள் என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். எங்களது காவல் நிலையத்தில் பணிபுரியும் ஓர் உதவி ஆய்வாளருக்கும் அந்த வாகனத்தின் உரிமையாளருக்கும் பிரச்சனை இருப்பதாலும் அது சம்மந்தமாக மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் நிலுவையில் இருந்ததாலும், இந்த வழக்கை உண்மையான எதிரியின் மீது பதிவு செய்யாமல் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.